35 வயது வரை உள்ள இளைஞர்களுக்கு மத்திய அரசின் உதவியோடு நடத்தப்படுவதால் இந்த வயது வரம்பை மத்திய அரசு நிர்ணயிக்கிறது. 35 வயதுக்கு மேலான இளைஞர்களுக்கு, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிற புதிய தொழில் கொள்கை அடிப்படையில் அத்தகைய தொழில் தொடங்குவதற்கு முன்வருவார்களேயானால் அவர்களுக்கு உரிய உதவி கிடைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 459, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

459—

ஆரணி தொகுதியில் பட்டுத் தொழிலை ஊக்குவித்தல்.

* 11323—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் :

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆரணி தொகுதியில் பட்டுத் தொழிலை ஊக்குவிக்க அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

முற்பகல் 10–45

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரேடியோவைத் திருப்பினாலும் கூட "பட்டு ஒத்த பட்டு அது ஆரணிப்பட்டு" என்கின்ற அளவுக்கு (குறுக்கீடு) காஞ்சீபுரம் பட்டு என்றுகூட வருகிறது. அதோடு சேர்த்து ஆரணியையும் சேர்த்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) அந்த அளவுக்கு இன்றைக்குப் பட்டுத் தொழிலிலே பேர்போன ஆரணி

தமிழ்நாடு சட்டப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாநகரிலே என்னுடைய தொகுதியிலே பெரும்பான்மையான மக்கள் நெசவாளர்கள். இன்றைக்கு அந்த நெசவாளர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற பாதிப்பின் காரணமாக இன்றைக்கு நலிந்து கொண்டு இருக்கின்ற அந்த பட்டுத் தொழிலை ஊக்குவிக்க வேண்டிய கால கட்டத்திலே நாம் இருந்து கொண்டிருக்கிறோம். பெரும்பாலான அந்த நெசவாள மக்கள் இரண்டு வகைகளிலே பெறுகிறார்கள். ஒன்று கூட்டுறவுத் துறையிடமிருந்து பெறு கிறார்கள். மற்றொன்று தனியாரிடமிருந்து பெறுகிறார்கள். அப்படி பெறுகின்ற மக்களிலே பெரும்பான்மையானவர்கள் தனியாரிடத்திலேயிருந்து பெறுகிறார்கள். ஆனால் இன்று இருக்கிற சூழ்நிலையிலே அவர்கள் தொழிலைச் செய்வதற்கு தேவையான பட்டு அவர்களுக்குக் கிடைக்காத காரணத்தினாலேயே, அவர்கள் இதை ஒரு புகாராக என்னிடத்திலே சொன்ன போது, அந்த தனியாரிடத்திலே என்ன என்று கேட்ட போது அவர்களுக்குத் தேவையான பட்டை அவர்கள் பெங்களூரிலிருந்து வாங்கி வர வேண்டியிருப்பதாகவும், பெங்களூரிலே பட்டின் விலை அதிகமாக இருக்கிறது என்றும் சொன்னார்கள். இதன் காரணமாக அங்கே இருக்கின்ற நெசவாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் (மணியடிக்கப் பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: அந்த அடிப்படைப் பட்டைக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பாரா? ஆம் எனில், அதற்காக அமைச்சர் என்ன நடவடிக்கை மேற்கொள்வார் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி தொகுதியில் பட்டுத் தொழிலை ஊக்குவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்ற வினாவை தொடுத்துள்ளார்கள். அந்த வினாவின் அடிப்படையிலே கடந்த ஆண்டில் மட்டும் 75 நபர்களுக்கு பட்டுத் தொழிலை மேற் கொள்ள 12 ஆயிரம் முட்டைத் தொகுதிகளை வளர்த்து 3.61 லட்சம் மதிப்பில் பட்டுப் புழுக்களை உற்பத்தி செய்து பயன் அடைந்துள்ளார்கள். மேலும் நடப்பு திட்ட ஆண்டில் 125 ஏக்கரில் மல்பெரி நடவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதிலே 208 விவசாயிகள் 105 ஏக்கர் அளவில் மல்பெரி பயிர் செய்து வருகிறார்கள். இவர்களில் 75 நபர்களுக்கு பயிர்க் கடனாக ரூ. 52,500-ம், பட்டுப்புழு வளர்ப்பு மனை கட்டுவதற்காக ரூ. 3 லட்சமும், பட்டு வளர்ப்புக்கான உபகரணங்கள் கொள்முதலுக்காக ரூ. 1,68,750-ம் வங்கிகள் மூலம் கடன் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 3.61 லட்சத்திலே

75 நபர்களுக்கு பட்டு வளர்ப்புக்காக, உற்பத்திக்காக கடனுதவிகள் மற்ற உதவிகள் செய்வதாக இங்கே சொன்னார்கள். 125 ஏக்கர் நிலத்திலே 208 விவசாயிகள் இந்த தொழிலை மேற்கொள்வதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். அவருக்கு மிக்க நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்துலே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி ஆட்சியிலே எங்களுடைய தொகுதியில் ஒரு செரிகல்சர் கிளை அலுவலகத்தைத் தந்திருக்கிறார்கள். அதற்காக நான் அவர்களுக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலுங்கூட அந்தப் பகுதிகளிலேயெல்லாம் நான் நேரிலே சென்று பார்த்த போது, ஆரணியிலே மல்பெரி நன்றாக விளையக்கூடிய பூமியாக இருக்கிறது. அப்படி விளையக்கூடிய அந்த பூமியிலே பட்டுப் பூச்சி உற்பத்தி செய்வதும், அதிலே இருந்து பட்டு வளர்ப்பதும், ரீலிங் செய்வதற்கும் ஆரணி தொகுதியிலே இன்றைக்குக் கிட்டத்தட்ட 150 டுவிஸ்ட்டிங் பேக்டரிகள் இருக்கின்றன. அங்கெல்லாம் இந்த பட்டுகள் ஆரணித் தொகுதியிலேயே உற்பத்தி செய்து கொடுக்கப்படுமானால் ஆரணி தொகுயிலே இருக்கின்ற மக்கள் வேறு எங்கும் செல்ல வேண்டாம். (மணியடிக்கப் பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதல் துணைக் கேள்வியிலேயே அவ்வளவு விரிவாக வேண்டாமென்று நான் சொன்னேன். இரண்டாவது துணைக் கேள்வியிலேயும் இவ்வளவு விரிவாகப் பேசிக் கொண்டு இருந்தால் என்ன செய்வது? துணைக் கேள்வி கேளுங்கள்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: அந்த 125 ஏக்கர் என்று சொன்னார்கள். ஆரணியிலே இருக்கின்ற நெசவாளர்களுக்கு அந்த 125 ஏக்கரிலே வளர்க்கப்படுகின்ற பட்டு போதாது என்றும் ஆரணி தொகுதியைச் சுற்றி நிறைய இடங்கள் இருக்கின்றன. நிறைய விவசாயிகள் இருக்கிறார்கள். ஆகவே மிக அதிக அளவிலே இந்த பட்டை உற்பத்தி செய்வதற்காக அமைச்சர் அவர்கள் நடவடிக்கையை மேற்கொள்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னுடைய மானியக் கோரிக்கையினுடைய பதிலுரையைக் கேட்டிருப்பார்கள் என கருதுகிறேன். அதிலே பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதுபோன்று ஆரணியிலே இன்னும் மல்பெரி பயிரிடுவதற்கு நடவடிக்கைகள் இன்னும் அதிகமாக பயிரிடுவதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 460, திரு. கா. பூ. அம்னுசாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.